மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம், திருவண்ணாமலை மண்டலம், செங்கம் பணிமனை தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. போக்குவரத்துக் கழகத்திற்கான சொந்தமாக பணிமனை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, செங்கம் தாலுகா, துவக்கவாடி கிராமத்திற்கு உட்பட்ட சர்வே எண் 54/1-ல் உள்ள 4 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, போக்குவரத்துக் கழகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர், முதன்மைச் செயலாளர், நில நிருவாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்துள்ளார். நில உரிமை மாற்றம் செய்த பின், செங்கத்தில் பணிமனை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு டெப்போ அமைத்திட கேட்ட உடனேயே அனுமதி கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

118—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***17297—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 ஏப்ரல் 1]

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது, 2002 ஆம் ஆண்டு அரசு அறிவித்த தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையின்படி, சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும் என்பதற்கிணங்க, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 8 இடங்களில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது. அவை சென்னை–சோழிங்கநல்லூர், கோயம்புத்தூர்–விளாங்குறிச்சி, மதுரை–எளந்தைகுளம், மதுரை–வடபழஞ்சி, திருச்சி–நவல்பட்டு, திருநெல்வேலி–கங்கைகொண்டான், சேலம்–ஜாஹீர் அம்மாபாளையம், ஓசூர்–விஸ்வநாதபுரம் ஆகும். இந்தப் பூங்காக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்கோசெஸ் [Elcosez] என்று பெயர் சூட்டியுள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழகத்திலுள்ள தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களில் சுமார் மொத்தம் 3 இலட்சத்து 75 ஆயிரம் நபர்கள் நேரடித் தொழிலாளர்களாகவும், 7 இலட்சத்து 50 ஆயிரம் நபர்கள் மறைமுகத் தொழிலாளர்களாகவும் பணிபுரிந்து வருகிறார்கள்.

முற்பகல் 10–55

மேலும், வேலூர் மற்றும் விழுப்புரத்திலும் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள் அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது. எனவே, மேட்டுப்பாளையம் தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க தற்போது உத்தேசம் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித நேயம் கொண்ட, வாழும் மனித தெய்வம் மக்கள் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியிருக்கின்ற ஒரு பகுதியாகும். இந்தப் பகுதி மலைவாழ் மக்கள், ஆதி திராவிடர், பழங்குடியின மக்கள் வாழுகின்ற பின்தங்கிய ஒரு தொகுதியாக இருக்கின்றது. இந்தப் பகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைத்துத் தர வேண்டும். இன்றைக்கு ஏழையெளிய, படித்த மாணவர்கள் அதிகம் இருக்கின்ற நகராட்சியை ஒட்டியிருக்கின்ற, பல்வேறு நிறுவனங்கள் கொண்ட ஒரு மாவட்டம், கோவை மாவட்டம் ஆகும். கோவை மாவட்டம் வளர்ந்து வருகின்ற ஒரு மாவட்டமாக இருந்தாலும்கூட நகரத்தை ஒட்டியிருக்கின்ற படித்த மாணவர்கள் பல்வேறு தொழில்களைச் செய்வதற்கு அது வாய்ப்பாக இருக்கிறது. மலையை ஒட்டி இருக்கின்ற மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் இதுபோன்ற தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைத்துத் தந்தால், ஏழையெளிய மாணவர்கள், பின்தங்கிய மாணவர்கள் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கின்ற மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையிலே அந்தக் கேள்வியை நான் இங்கு தொடுத்தேன். இருந்தாலும்கூட, இன்றைக்கு கோவை மாவட்டத்தைச் சார்ந்த கவுண்டபாளையத்திலே விளாங்குறிச்சி என்ற பகுதியில் அந்தப் தொழில்நுட்பப் பூங்காவை அமைத்துத் தருவதாக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருப்பது என்பது எங்களுக்கு மன நிறைவைத் தருகிறது. அதற்கு என்னுடைய கோடானுகோடி நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து, வருகிற காலங்களிலே பின் தங்கிய அந்தப் பகுதிகளைப் பரிசீலிப்பார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பவியல் துறையில் உலக அளவில் ஏற்பட்டுள்ள மந்த நிலை காரணமாக தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் விரிவாக்கத்திற்குச் சுணக்கம்

2013 ஏப்ரல் 1]

காட்டுகின்றன. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நிலத்தின் மதிப்பை பன்மடங்கு உயர்த்தியதன் காரணமாக, தகவல் தொழில் நுட்பவியல் நிறுவனங்கள் சுணக்கம் காட்டுகின்றன. ஒரு சில நிறுவனங்களுடன் நடத்திய கலந்தாய்வில், இரண்டாம் நிலை நகரங்களில் நிர்ணயிக்கப்பட்ட நிலத்தின் விலை அதிகமாக உள்ளதாகவும் கருதுகின்றன என்பது தெரிகிறது. வருங்காலங்களில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவை மேட்டுப்பாளையத்தில் அமைக்க வாய்ப்பு இருப்பின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

119—

தொழிலாளர் நீதிமன்றம்

***22012—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சென்னையில் நான்கு இடங்களிலும், வேலூரில் இரண்டு